1967 ஜூலை 10]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: நல்ல, தரமான கால் நடைகளைப் பெறுவதற்கு, க்ராஸ் ப்ரீடு மூலம் ஏற்பாடு செய்கிறோம். மாடுகளுக்குத் தீவனம் அளிப்பதற்காக எங்கெங்கு புறம்போக்கு நிலம் இருக்கிறதோ அதை மேய்ச்சல் காடாக ஆக்கிப் புல் வளரச் செய்யவேண்டும் என்று பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு யோசனை கூறியிருக்கிறோம். அதைச் செயல்படுத்துகிற முறையில் கால்நடை அபிவிருத்தி ஆகும் என்று நினைக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: 'பால் பெருக்கு நாள்' என்பதை 'பால் விநியோக நாள்' என்று மாற்ற முடியுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அது ஏற்கனவே வழங்கி வந்த தினமாக இருக்கிறது. பால் பெருக்க நாளைப் பால் விநியோக நாளாக மாற்றவேண்டும் என்றால், அதற்குத் தனிக் கேள்வி போட்டால், அதுபற்றி யோசிக்கலாம்.

நகரவைத் தலைவர்கள்

* 238 வினு.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960 முதல் 1966 வரையில் எந்தெந்த நகரசபைத் தலைவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது?

(இ) அதற்கான காரணம், யார் யார்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) இந்தக் கால அளவின் போது, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி நகராட்சி மன்றத் தலைவர்களை பதவியிலிருந்து ஏன் நீக்கக் கூடாது என்பதற்கான காரணம் கேட்கும் அறிவிப்புகள் அத்தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. இவற்றின் மீது முடிவான ஆணைகள் இன்னும் பிறப்பிக்கப்படவில்லை.

(இ) திருச்சிராப்பள்ளி நகராட்சி மன்றத் தலைவர் திரு. A.S.G. லூர்துசாமிப் பிள்ளை அவர்கள், அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு கமிஷனர் கொடுத்த அறிக்கை ஒன்றை அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டுமென்றே மறுத்துவிட்டார். மேலும், வெளியேற்றும் நடவடிக்கைகளை (Eviction Proceedings) நிறுத்திவைக்குமாறு ஆணையிட்டு, கமிஷனரின் நிர்வாக அலுவல்களிலும் குறுக்கிட்டார். எனவே, திரு. லூர்துசாமிப் பிள்ளை அவர்கள் ஏன் பதவியிலிருந்து நீக்கப்படக்கூடாது என்பதற்கான காரணம் காட்ட வேண்டுமென அரசாங்கம் 24—4—1965 தேதியுள்ள கிராம வளர்ச்சி-தல நிர்வாகத் துறையின் 958 எண் ஆணையின் மூலம் அவரைக் கேட்டுள்ளது.

தற்போதைய முதலமைச்சரின் உருவப்படத்தைத் திறந்து வைப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கி ஆணை பிறப்பிக்கும் வரை காத்திருக்கத் தவறியதற்காகவும், அரசாங்கத்தின் அனுமதி

இல்லாமலேயே முஸ்லீம் லீக் தலைவர் ஜனப் எம். எம். இஸ்மாயில் அவர்களின் உருவப்படத்தை திறந்து வைத்ததற்காகவும் திருநெல் வேலி நகராட்சி மன்றத் தலைவர் திரு. எம். அப்துல் மஜீத் அவர்கள் பதவியிலிருந்து ஏன் நீக்கப்படக்கூடாது என்பதற்கான காரணம் காட்டுமாறு அவரை அரசாங்கம் கேட்டது.

முற் பகல் 10–00 **திரு. என். சங்கரய்யா :** இம்மாதிரியாக நகரசபை சேர்மன்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் வகுத்திருக்கக் கூடிய கோட்பாடுகளிலே உள்ள முக்கியமான அம்சங்கள் எவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சென்னை ஜில்லா நகராட்சி சட்டதிட்டங்கள் 40-வது செக்ஷன்படி சில விதிகளைப் போட்டிருக் கிறார்கள்.

'Under Section 40 of the Madras District Municipalities Act, 1920, the State Government may, by notification, remove any chairman or vice-chairman, who in their opinion wilfully omits or refuses to carry out or disobeys the provisions of this Act or any rules, by-laws, regulationgs or lawful orders issued thereunder or abuses the powers vested in him. The Chairman or vice-chairman shall however be given an opportunity for explanation before removal.'

திரு. பெ. மலைச்சாமி : 1966-ம் ஆண்டு ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள்மீதோ, ஊராட்சித் தலைவர்கள் மீதோ ஏதாவது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இது நகராட்சித் தொடர் புடைய கேள்வி. ஆகவே, ஊராட்சி ஒன்றியப்பற்றித் தனிக் கேள்வி போடவும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : சார், ஒரு சில நகராட்சித் தலைவர்கள் மீது ஏற்கனவே இருந்த அரசாங்கமும், அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்காமல் வருஷக்கணக்கில் தாமதப் படுத்தியிருக்கின்ற கேசுகளை, இந்த அரசாங்கம் பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : எந்த இடத்திலே அம்மாதிரி யான குறை இருக்கிறதென்பதை மாண்புமிகு அங்கத்தினர்கள் எழுதியனுப்பினால், அதுபற்றித் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஆலடி அருணா : அவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரசபை தலைவருக்குக் கொடுக்கப்பட்ட 'ஷோ காஸ்' நோட்டீ- ஸுக்கு அவர் பதில் தந்தாரா ? அப்படியென்றால், அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? அப்படி அவர் பதில் தராதிருந்தால், அதன்மீது என்ன நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது?

1967 ஜூலை 10]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: திருச்சிராப்பள்ளி தண்டல் நாயகம் அவர்களிடமிருந்தும், கனம் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களிடமிருந்தும் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. இது வரையில் அந்த அறிக்கை கிடைக்கவில்லை. ஆகவே, அறிக்கை உடனடியாகக் கிடைக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படும்.

DR. H. V. HANDE: Sir, with regard to the Tirunelveli municipality, two years ago a similar question was put by me with regard to the supersession of that municipality and the answer then given contained an entirely different set of reasons. Now the Hon. Minister has stated in his answer to the main question that one of the reasons for the supersession of that municipality is the unveiling of the portrait of the present Chief Minister. There is a clearcut discrepancy in the answers given to the same question. I wish to know whether this Government have fixed responsibility on the particular officer concerned who gave wrong information two years ago?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, திருநெல் வேலி மாவட்ட நகராட்சியை, மாவட்ட நகராட்சி சட்டத்தின்படி அதைக் கலைத்தபோது அதற்குப் பல காரணங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. அந்தக் காரணங்கள்பற்றி உயர்நீதி மன்றம் முடிவு சொல்லியிருக்கிறது. இந்தக் காரணம், குறிப்பிட்ட நிகழ்ச் சிக்காக ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கேட்டார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. நகராட்சியைக் கலைத்ததைப் பற்றி தனித்தனிக் காரணங்கள் ஒவ்வொன்றும் கொடுத்தார்கள். இதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி, சாத்தான்குளம்

* 239 வினா.—திரு. டி. மார்டின்: மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சாத்தான்குளத்தில் பெண்கள் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி ஒன்று நிறுவும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

THIRU T. MARTIN: Sir, may I request the Hon. Minister to reconsider his decision in view of the fact that there are a large number of girls, daughters of Ceylon repatriates, waiting for more than four years for getting admission in training schools after having completed S.S.L.C.?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய மாநிலத்திலே ஆசிரியர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள் 117-ம் நான்-பேஸிக் ஸ்கூல்—மற்ற பயிற்சிப்பள்ளிகள்